# ஆற்றல்

அகரம் aharam

## மாதிரிப் பரீட்சை - 2021

## தொடர் - 10

## தரம் 5

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சைக்கான வழிகாட்டல்

## வினாத்தாள் - I

1 மணித்தியாலம்

சுட்டெண் :..................................................

**பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்:**

- உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.
- **மூன்றாம் பக்கத்தில்** குறித்த இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- இவ்வினாத்தாளில் **40** வினாக்கள் உள்ளன. **எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே** தருக.
- ஒவ்வொரு வினாவிற்கும் **மூன்று** விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றிடையே ஒவ்வொரு வினாவிற்கும் உரிய **சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**


விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்


| பக்க இலக்கம் | பெற்ற புள்ளிகள் |
|---|---|
| 02 | |
| 03 | |
| 04 | |
| 05 | |
| 06 | |
| 07 | |
| 08 | |
| மொத்தம் | |
| இறுதிப்புள்ளிகள் | |
| இலக்கத்தில் | |
| சொற்களில் | |


| | பெயரும் ஒப்பமும் |
|---|---|
| **முதலாவது பரீட்சகர்** புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன். | |
| **இரண்டாவது பரீட்சகர்** முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன். | |
| **மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர்** மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப்புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன். | |
| **பிரதம பரீட்சகர்** மேற்பார்வை செய்தேன். இறுதிப்புள்ளிகள் சரியாகும். | |


தயாரிப்பு ஆசிரியர் **திரு.ப.சந்திரமோகன்**


01ஆம் 02ஆம் வினாக்களில் தரப்பட்டுள்ள உருவைப் பூரணப்படுத்துவதற்கு வெற்றிடத்தில் வரவேண்டிய பகுதியைத் தெரிவு செய்க.


01. 



(1)



(2)


(3)

02. 



(1)



(2)



(3)


பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் தரப்பட்டுள்ள உருக்களில் ஒன்று ஏனையவற்றில் இருந்து வேறுபட்டுக் காணப்படுகின்றது. அவ்வுருவைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

03.



(A)



(B)



(C)



(D)

04.


(A)



(B)



(C)



(D)


பின்வரும் வினாக்களில் தரப்பட்டுள்ள படங்களை ஏதாவது ஒரு தொடர்பின் அடிப்படையில் இரண்டு கூட்டங்களாக வகைப்படுத்த முடியும். அவ்வாறு வகைப்படுத்தப்பட்டுள்ள விடையின் கீழே கோடிடுக.

05.






**A**


**B**


**C**


**D**

(1) A:C , B:D (2) A:B , C:D (3) A:D , B:C

06.    

A B C D

(1) A:C , B:D (2) A:B , C:D (3) A:D , B:C

07. பாடசாலை விழா ஒன்றிற்கான நிகழ்ச்சி நிரலில் உள்ள விடயங்கள் சில ஒழுங்கு மாற்றப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளன. அவற்றின் சரியான ஒழுங்குமுறையைக் கொண்ட விடை எது?

A - அதிபரின் உரை.
B - வரவேற்பு உரை.
C - நன்றி உரை.
D - அதிதிகளின் வருகை.
E - பரிசில் வழங்கல்.
F - பிரதம அதிதியின் உரை.

(1) BDCAEF (2) ACEFDB (3) DBAEFC

08. பிள்ளைகள் பெரியோரை மதிக்கவேண்டும். இதற்குக் காரணம்.

(1) அவர்கள் வயதில் கூடியவர்களாக இருக்கின்றமை.

(2) பெரியவர்களால் தண்டனை வழங்க முடியும் என்பதால்.

(3) அவர்களின் வழிகாட்டல் எமது வாழ்க்கைக்கு உதவும் என்பதால்.

09. பெற்றோரிடமிருந்து பிள்ளைகள் எதிர்பார்ப்பது.

(1) கண்டிப்பு , வேற்றுமை , அவமானம்

(2) அன்பு , பாதுகாப்பு , ஆதரவு

(3) பாதுகாப்பு , தண்டிப்பு , போட்டி

கீழே தரப்பட்டுள்ள எழுத்துக்களையும் இலக்கங்களையும் அடிப்படையாகக் கொண்டு விடையளிக்குக.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | க | மு | 7 | அ | B | C | D | இ | வ |
| 5 | H | K | E | 9 | 4 | D | ல | R | 6 |

10. இங்கு இலக்கங்கள் அதிகமாக இருப்பின் 'அ' எழுத்தின் கீழ்க் கோடிக. எழுத்துக்கள் அதிகமாக இருப்பின் 'க' எழுத்தைச் சுற்றி வட்டம் இடுக.

11. ஆங்கில எழுத்துக்கள் அதிகமாக இருப்பின் இலக்கம் '8' இன் மீது புள்ளடியிடுக. தமிழ் எழுத்துக்கள் அதிகமாக இருப்பின் இலக்கம் '9' ஐச் சுற்றி வட்டம் இடுக.


13. எனது தற்போதைய வயது 10 வருடங்கள் ஆகும். எனது சகோதரனின் தற்போதைய வயது எனது வயதிலும் பார்க்க 3 வருடங்கள் அதிகமானதாகும். அதன்படி மூன்று வருடங்களுக்கு முன்னர் எம் இருவரதும் வயதுகளின் கூட்டுத்தொகை யாது?

(1) 10 (2) 20 (3) 17

14. கடை ஒன்றில் மூன்று சவர்க்கார உறைகளைக் கொடுப்பதன் மூலம் ஒரு சவர்க்காரக் கட்டியை இலவசமாகப் பெற்றுக்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டிருந்தது. இதற்கேற்ப பதினைந்து சவர்க்கார உறைகளை வைத்திருக்கும் ஒருவர் பெற்றுக்கொள்ளக்கூடிய சவர்க்காரக் கட்டிகளின் ஆகக்கூடிய எண்ணிக்கை யாது?

(1) ஐந்து (2) ஆறு (3) ஏழு


15. பின்வரும் உருவுடன் தொடர்புடைய சொற்கள் மட்டும் அடங்கிய விடையின் கீழே கோடிடுக.




(1) கடல் , போக்குவரத்து , மாலுமி
(2) சில்லு , கடல் , போக்குவரத்து
(3) பயணிகள் , தரை , சொகுசு

16. கீழே தரப்பட்டுள்ள எல்லாச் சொற்களுடனும் பொருந்துகின்ற விடையைத் தெரிவு செய்க.


வயல் , அறுவடை , விவசாயி



(1)



(2)



(3)

பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஆறு சொற்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் இரண்டு சொற்கள் ஏனையவற்றிலிருந்து வேறுபடுகின்றன. அவற்றின் கீழே கோடிடுக.

17. வாய் , கண் , மூக்கு , சுவை , மணம் , காது

(1) சுவை, மணம் (2) கண், காது (3) மூக்கு, சுவை

18. பகலவன், சந்திரன், சூரியன், நட்சத்திரம், பரிதி, கதிரவன்

(1) பகலவன், கதிரவன் (2) சந்திரன், பரிதி (3) சந்திரன், நட்சத்திரம்

பின்வரும் வினாக்களில் தரப்பட்டுள்ள வாக்கியங்களில் சரியாக எழுதப்பட்டுள்ள வாக்கியத்தின் கீழ்க் கோடிக.

19. (1) மல்லிகைப்பூ மனம் வீசியது.

(2) மல்லிகைப்பூ மணம் வீசியது.

(3) மள்லிகைப்பூ மணம் வீசியது.

20. (1) அவர்கள் சமாதானத்தின் முன்ணோடிகள்.

(2) அவர்கள் சமாதானத்தின் முன்னோடிகள்.

(3) அவர்கள் சமாதாணத்தின் முன்னோடிகள்.

21. நான்கு மனிதர்கள் ஒரே இடத்தில் இருந்து புறப்பட்டு நான்கு மணித்தியாலங்கள் நடந்து 16 கிலோமிற்றர் தூரம் சென்றனர். ஒரு மனிதன் ஒரு மணித்தியாலத்தில் நடந்த தூரம் எவ்வளவு?

(1) 1 கிலோமீற்றர் (2) 5 கிலோமீற்றர் (3) 4 கிலோமீற்றர்

22. கூடு ஒன்றினுள் சில குருவிகள் இருந்தன. அதன் இருமடங்கு எண்ணிக்கையான குருவிகள் கூட்டுக்கு வெளியே இருந்தன. வெளியே இருந்த ஒரு குருவி கூட்டின் உள்ளே சென்றதும் கூட்டின் உள்ளேயும் வெளியேயும் சம எண்ணிக்கையான குருவிகள் இருந்தன எனின் அங்கிருந்த குருவிகளின் மொத்த எண்ணிக்கை யாது?

(1) 4 (2) 5 (3) 6

A, B, C, D, E என்னும் ஐவர் ஒரு வரிசையில் நின்றனர். D இற்கு முன்னால் A நிற்கின்றான். C இற்குப் பின்னால் B நிற்கின்றான். D , A இருவருக்கும் இடையில் E நிற்கின்றான் வரிசையின் முதலில் நிற்பவர் C ஆவார்.

23. வரிசையின் நடுவில் நிற்பவர் யார்?

(1) A (2) D (3) B

24. வரிசையில் இறுதியில் நிற்பவர் யார்?

(1) E (2) D (3) A

25. **மதுரம்** என்ற சொல் **5297** என எழுதப்பட்டால் சதுரம் என்ற சொல் எழுதப்பட்டிருக்கும் முறை எது?

(1) 2974 (2) 2497 (3) 4297

26. விவேகம் என்பது AKUT என எழுதப்பட்டால் விரோதம் என்பது எழுதப்பட்டிருக்கும் முறை எது?

(1) ARXT (2) ARUT (3) ADRV

பின்வரும் வினாக்களில் தரப்பட்டுள்ள சொற்களில் உள்ள எழுத்துக்களை மட்டும் கொண்டு ஆக்கப்பட்டுள்ள சொல்லின் கீழ்க் கோடிடுக.


27. அருங்காட்சியகம்

(1) அரும்பு (2) காயம் (3) கண்காட்சி

28. பண்டைக்காலம்

(1) பலம் (2) பண்டம் (3) படைக்கலம்


29. கீழே தரப்பட்டுள்ள வடிவங்களை நன்கு அவதானியுங்கள்.





ஒவ்வொரு வடிவத்திற்கும் வரையக்கூடிய சமச்சீர்க் கோடுகளின் எண்ணிக்கை கூடிச்செல்லும் ஒழுங்கில் ஒழுங்குபடுத்தும்போது கிடைக்கும் விடையைத் தெரிவுசெய்க.

(1) A B C D E (2) E A B C D (3) B E D C A


30. சதுரமுகியை அமைப்பதற்கான விரிப்பு கீழே தரப்பட்டுள்ளது. அதனைச் சதுரமுகி வடிவில் ஆக்கும்போது தோன்றும் அமைப்பைத் தெரிவு செய்க.




(1) (2) (3)


31. கீழே சதுரமுகி ஒன்றின் மூன்று நிலைகள் தரப்பட்டுள்ளன. அவற்றை அவதானித்து ஆங்கில எழுத்து Z இற்கு எதிரே இருக்கும் முகத்தில் உள்ள எழுத்தைத் தெரிவு செய்க.





(1) U (2) W (3) Y


தரப்பட்டுள்ள இரு உருக்களையும் ஒன்றின் மீது ஒன்று வைக்கும்போது கிடைக்கும் உருவைத் தெரிவு செய்க.

32.






(1)





(2)




(3)

33.






(1)



(2)



(3)

34. முகம்பார்க்கும் கண்ணாடியில் பார்க்கும் போது மாற்றமின்றித் தெரியும் நேரங்களைக்கொண்ட விடையினைத் தெரிவுசெய்க.

(1) 12.30 , 6.00 (2) 12.00 , 6.00 (3) 9.00 , 3.00

35. மாலாவிடம் 10 பென்சில்கள் இருந்தன. சீதாவிடம் இதிலும் பார்க்க 12 பென்சில்கள் கூடுதலாக இருந்தன. கலாவிடம் சீதாவிலும் 3 பென்சில்கள் குறைவாக இருந்தன. மூவரிடமும் இருந்த பென்சில்களின் மொத்த எண்ணிக்கை யாது?

(1) 54 (2) 48 (3) 51

36. 100 தொடக்கம் 110 வரையுள்ள எண்களை எழுதும்போது இலக்கம் 0 பயன்படுத்தப்படும் தடவைகளின் எண்ணிக்கை யாது?

(1) 10 (2) 11 (3) 12

37. நான்கு சனிக்கிழமைகளைக் கொண்ட சித்திரை மாதம் ஒன்றில் அச்சனிக்கிழமைகளின் திகதிகளின் கூட்டுத் தொகைக்கு இருக்கக்கூடிய குறைந்தபட்ச பெறுமதி யாது?

(1) 54 (2) 58 (3) 70

38. தை மாதம் ஒன்றில் செவ்வாய்க்கிழமை, புதன்கிழமை, வியாழக்கிழமை ஆகிய நாட்கள் ஐந்து தடவைகள் வீதம் வந்தன. எனின் இம்மாதத்தின் 28 ஆம் திகதி என்ன கிழமை?

(1) ஞாயிறு (2) திங்கள் (3) செவ்வாய்

நான் ஓர் ஆண் ஆவேன். எனது அக்காவிற்கு இரண்டு ஆண் சகோதரர்களும் இரண்டு பெண் சகோதரிகளும் உள்ளனர். ஆகவே

39. எனக்கு எத்தனை ஆண் சகோதரர்கள் உள்ளனர்?

(1) ஒருவர் (2) இரண்டுபேர் (3) மூன்றுபேர்

40. எனக்கு எத்தனை பெண் சகோதரிகள் உள்ளனர்?

(1) ஒருவர் (2) இரண்டுபேர் (3) மூன்றுபேர்

# ஆற்றல்

அகரம் Akaram

## மாதிரிப் பரீட்சை - 2021

## தொடர் - 10

## தரம் 5

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்கு வதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சைக்கான வழிகாட்டல்

## வினாத்தாள் - II

1 மணித்தியாலம் 15 நிமிடங்கள்

**சுட்டெண்** :..................................................

**பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்:**

- உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.
- **மூன்றாம் பக்கத்தில்** குறித்த இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- இவ்வினாத்தாளில் உள்ள **எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத் தாளிலேயே** தருக.
- சரியான விடையின் கீழ்க் கோடிடுமாறு கூறப்பட்ட ஒவ்வொரு வினாவிற்கும் உரிய **சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**
- சரியான விடை எழுதப்படவேண்டிய ஒவ்வொரு வினாவிற்கும் உரிய **சரியான விடையைப் புள்ளிக்கோட்டின்மீது எழுதுக.**

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

| பக்க இலக்கம் | பெற்ற புள்ளிகள் |
|---|---|
| 02 | |
| 03 | |
| 04 | |
| 05 | |
| 06 | |
| 07 | |
| 08 | |
| மொத்தம் | |
| இறுதிப்புள்ளிகள் | |
| இலக்கத்தில் | |
| சொற்களில் | |

| | பெயரும் ஒப்பமும் |
|---|---|
| **முதலாவது பரீட்சகர்** புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன். | |
| **இரண்டாவது பரீட்சகர்** முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்து கின்றேன். | |
| **மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர்** மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப்புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன். | |
| **பிரதம பரீட்சகர்** மேற்பார்வை செய்தேன். இறுதிப்புள்ளிகள் சரியாகும். | |

தயாரிப்பு ஆசிரியர் **திரு.ப.சந்திரமோகன்**

**01. பின்வரும் பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

சுறுசுறுப்புக்கு எவற்றை எடுத்துக்காட்டாகக் கூறுவார்கள்? எறும்பையும் தேனீயையும் தானே! இன்று நாம் தேனீக்களைப் பற்றி அறிந்துகொள்வோமா! தேனீக்கள் மரக்கொம்பு, மரப்பொந்து, குகை முதலிய இடங்களிலே கூடமைக்கும். அதிலே உணவுக்காகத் தேனைச் சேமித்து வைக்கும். பண்டைக்கால மக்கள் அந்தத் தேனையும் மெழுகையும் சேகரித்தனர்.
தேனீக்களில் மலைத் தேனீ, கொம்புத் தேனீ, பொந்துத் தேனீ எனப் பல வகைகள் உண்டு. அவற்றுள் நாம் கூட்டில் வளர்க்கத்தக்கதும் அதிக பயனைத் தரத்தக்கதும் பொந்துத் தேனீயாகும். அது வாழும் கூட்டில் இராணித் தேனீ, வேலைக்காரத் தேனீ, சோம்பேறித் தேனீ என மூவினத் தேனீக்கள் உண்டு.

(1) சுறுசுறுப்பாக இருப்பவை எவை?

..........................................................................................................................................

(2) அதிக பயனைத் தரக்கூடிய தேனீ எது?

..........................................................................................................................................

(3) தேனீக்களின் வகைகள் எவை?

..........................................................................................................................................

(4) தன்மைப் பன்மைப் பெயர்ச் சொல் எது?

..........................................................................................................................................

(5) உயர்திணைப் பன்மைப் பெயர்ச்சொல் ஒன்று எழுதுக.

..........................................................................................................................................

(6) புராதன காலம் என்னும் கருத்தைத் தரும் சொல் எது?

..........................................................................................................................................

**02. பொருத்தமான எழுத்துக்களைக் கொண்டு பின்வரும் சொற்களைப் பூரணப்படுத்துக.**

(1) பொ ........... து போக்கு (2) நடத்து .......... ர்

(3) அலுவ ........... கம் (4) தொ ............ ற்சாலை

**03. இடைவெளிக்குப் பொருத்தமான இலைமரபுப் பெயரை எழுதுக.**

(1) நான் வாழை .................................... யில் உணவு உண்டேன்.

(2) கமலா, தென்னை .............................. யில் கிடுகு பின்னினாள்.

(3) தோரணங்களுக்கு இடையே மா ................................ காணப்பட்டது.

**04. பின்வரும் வினாக்களுக்கு அடைப்புக்குள் தரப்பட்டுள்ள சொற்களுள் சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுக.**

(01) யானை மிகுந்த ................................................ உடைய மிருகம்.

( பலம் , பளம் , பழம் )

(02) அணில் மரத்திலேறி .................................................... தின்றது.

( பலம் , பளம் , பழம் )

(03) ........................................ நாடுகளில் தேயிலை பயிரிடப்படுகின்றது.

( மழை , மளை , மலை )

**05. பொருத்தமான நிறுத்தக்குறிகளை இடுக.**

(1) நீ இங்கே வா என்று ஆசிரியர் அழைத்தார்

(2) சூரியன் சந்திரன் அக்கினி என்பன முச்சுடர்களாகும்

**06. தொழிலைக் குறிக்கும் சொற்களை எழுதுக.**

(1) விமானம் செலுத்துபவன் - ..........................................................................

(2) யானை செலுத்துபவன் - ..........................................................................

(3) சட்டிபானை செய்பவன் - ..........................................................................

**07. தரப்பட்ட வாக்கியங்களை வினா வாக்கியங்களாக மாற்றி எழுதுக.**

(1) நானும் தம்பியும் பூங்காவிற்குச் சென்று விளையாடினோம்.

.......................................................................................................................................

(2) பெப்பிரவரி நான்காம் திகதி இலங்கையின் சுதந்திர தினம் கொண்டாடப்பட்டது.

.......................................................................................................................................

**08. பின்வரும் தனிவாக்கியங்களைத் தொடர்வாக்கியமாக எதுமுக.**

மேரி சித்திரம் வரைந்தாள்.

மேரி நிறம் தீட்டினாள்.

.......................................................................................................................................

**09. கீழ்வரும் தமிழ்ச் சொற்களுக்குரிய சிங்களச் சொற்களை தமிழ் எழுத்துக்களில் எழுதுக.**

(1) பாற்சோறு ........................................ (2) போவோமா? ........................................

**10. பின்வரும் சிங்களச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொற்களை எழுதுக.**

(1) கொஸ்ஸ ........................................ (2) திவுள் ........................................

**11. பின்வரும் ஆங்கிலச் சொற்களின் தமிழ்ப்பதத்தை எழுதுக.**

(1) meat ........................................ (2) tomato ........................................

**12. பின்வரும் தமிழ்ச் சொற்களுக்குரிய ஆங்கிலச் சொற்களை ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.**

(1) வெண்கட்டி ........................................ (2) நாட்காட்டி ........................................

**13. பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

(01) எழுத்துக்களில் தரப்பட்டுள்ள எண்ணை இலக்கங்களில் எழுதுக.

ஆறாயிரத்துத் தொண்ணூறு :- ........................................................................

(02) பின்வரும் எண்களில் மிகப்பெரிய எண்ணைத் தெரிவு செய்து எழுதுக.

25451 , 42458 , 34248 , 61761 ........................................................................

(03) கீழே தரப்பட்டுள்ள இந்து அராபிய எண்களுக்குரிய உரோமன் எண்களை எழுதுக.

(1) 3 ........................................ (11) 15 ........................................

(04) ஒரு தோட்டத்தில் 845 தேங்காய்கள் பறிக்கப்பட்டன. அவற்றில் 675 தேங்காய்கள் விற்பனை செய்யப்பட்டன. எஞ்சியுள்ள தேங்காய்களின் எண்ணிக்கை யாது?

........................................................................................................

(05) பெட்டியொன்றில் 48 சவர்க்காரக் கட்டிகள் உள்ளன. இவ்வாறான 4 பெட்டிகளில் உள்ள சவர்க்காரக் கட்டிகளின் எண்ணிக்கை யாது?

........................................................................................................

(06) 10kg கொள்ளக்கூடிய பாத்திரத்தில் 5kg 350g பருப்பு உள்ளது. பாத்திரத்தை முழுமையாக நிரப்புவதற்கு மேலும் தேவையான பருப்பின் அளவு யாது?

........................................................................................................

(07) 12m 50cm துணியிலிருந்து 8m 25cm துணி பயன்படுத்தப்பட்டால் எஞ்சியிருக்கும் துணியின் அளவு யாது?

........................................................................................................

(08)

| | |
|---|---|
| 9 | 15 |
| 21 | |
| 27 | 3 |

கூட்டுக்குள் உள்ள எண்களைப் பயன்படுத்தி எண்கோலம் அமைக்குக.

.............................................................................................

(09) ஒரு குவியலில் **3675** செங்கற்கள் உள்ளன. அக்குவியலில் மேலும் **2630** செங்கற்கள் சேர்க்கப்பட்டன. தற்போது குவியலில் உள்ள செங்கற்களின் மொத்த எண்ணிக்கை யாது?

.............................................................................................

(10) 1kg சீனியை சமனான நான்கு சரைகளாகக் கட்டிய போது 100g சீனி மிஞ்சியது. ஆகவே ஒரு சரையில் உள்ள சீனியின் அளவு யாது?

.............................................................................................


(11) உருளை ஒன்றில் உள்ள மேற்பரப்புகளின் எண்ணிக்கையை எழுதுக.


தட்டையான மேற்பரப்பு ................................ வளைந்த மேற்பரப்பு ..........................

(12) வருடம் ஒன்றில் 31 நாட்களில் முடிவடையும் மாதங்கள் எத்தனை?

.............................................................................................


(13) பின்வரும் எண்சட்டங்களில் வகைகுறிக்கப்பட்டுள்ள எண்களை எழுதுக.




..................................... .....................................

(14)



இக்கடிகார முகம் காட்டும் நேரத்திற்கு 15 நிமிடங்கள் முந்திய நேரத்தை எழுதுக.

.............................................................................................

(15) சரவணன் மு.ப.6.30 மணிக்கு வீட்டிலிருந்து புறப்பட்டு மு.ப.7.25 மணிக்குப் பாடசாலையை அடைந்தான். அவன் வீட்டிலிருந்து பாடசாலைக்குச் செல்வதற்குச் செவாகிய நேரம் எவ்வளவு?

.............................................................................................

14. பின்வரும் வினாக்களுக்கு மிகச் சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

01. விவசாயிகளின் நண்பன் என அழைக்கப்படும் பிராணி எது?
(1) மாடு (2) காகம் (3) மண்புழு

02. நீண்ட நாட்கள் உயிர் வாழக்கூடிய பிராணி எது?
(1) கடலாமை (2) திருக்கை (3) சுறா

03. மிக வேகமாக ஓடக்கூடிய பூச்சி எது?
(1) இராமபாணம் (2) எறும்பு (3) கரப்பான்


04. பாதுகாப்புக்காக உடலை ஓட்டினுள்ளே இழுத்துக்கொள்ளும் பிராணிகள்
(1) நத்தை, ஆமை (2) மர அட்டை, ஆமை (3) ஆமடில்லா, மர அட்டை

05. நுளம்புக்கடியினைத் தடுப்பதற்கு உடலில் பூசப்படும் திரவம் எது?
(1) நல்லெண்ணெய் (2) சித்திரனெல்லா எண்ணெய் (3) மண்ணெய்

06. பின்வருவனவற்றுள் ஒருவரிடத்திலிருந்து இன்னொருவருக்குப் பரவாத நோய் எது?
(1) வாந்திபேதி (2) மலேரியா (3) மாலைக்கண்

07. விற்றமின் C குறைபாட்டினால் ஏற்படும் நோய் எது?
(1) ஸ்கேவி (2) மரஸ்மஸ் (3) பெரிபெரி

08. கடதாசிகளை மடித்து செய்யப்படும் ஆக்கம் எது?
(1) கொலாஜ் (2) அல்பனா (3) ஓரிகாமி

09. 
இவ்வுருவில் காணப்படும் பொற்கோயில் அமைந்துள்ள இடம்.
(1) கண்டி (2) பொலன்னறுவ (3) தம்புள்ள

10. இலங்கையிலுள்ள மிகப்பெரிய குளம் எது?
(1) பராக்கிரம சமுத்திரம் (2) மின்னேரியாக் குளம் (3) சேனநாயக்க சமுத்திரம்


11. தையல் வேலையின் போது கையில் ஊசி குற்றாது இருப்பதற்காக அணிவது.
(1) தீதாள் (2) கையுறை (3) மோதிரம்

12. பிராணிகளால் தாவரங்களுக்குக் கிடைக்கும் நன்மையாக அமையாதது.
(1) பூக்களில் மகரந்தச் சேர்க்கைக்கு உதவுதல்
(2) வித்துக்கள் பரம்பலடைய உதவுதல்
(3) மரக்கிளைகளை முறித்தல்

13. சூரியகிரகணம் இடம்பெறுவது.
(1) அமாவாசை தினத்தில் (2) அட்டமி தினத்தில் (3) பௌர்ணமி தினத்தில்

14. பின்வரும் பூக்களில் வாசனை அற்ற பூ எது?
(1) மல்லிகை (2) றோசா (3) கடதாசிப்பூ


15. பின்வரும் பூக்களுள் இரவில் மலரும் பூ எது?
(1) அலரி (2) நந்தியாவட்டை (3) கடுபுல்


16. 


இவ்வுபகரணத்தின் பெயர்.

(1) பாரமானி
(2) திசைகாட்டி
(3) மழைமானி

17. பலகையினை அளுத்தமாகச் சீவுவதற்கு பயன்படுத்தப்படும் உபகரணம்

 (1)

 (2)

 (3)

18. நுகர் பொருட்களுக்கான சர்வதேச தரச்சான்று எது?
(1) SLS (2) ISO (3) ISBN

19. இக்குறியீடு குறித்து நிற்பது.
(1) மின் விநியோகம்
(2) ஸ்ரீலங்கா ரெலிகொம்
(3) இலங்கை மின்சார சபை

20. பின்வரும் உணவு வகைகளுள் நிறையுணவாக அமைவது எது?
(1) சோறு (2) இறைச்சி (3) பால்

21. வாகன ஓட்டுநரிடம் கட்டாயமாக இருக்கவேண்டிய ஆவணம் எது?
(1) தேசிய அடையாள அட்டை (2) பிறப்புச் சான்றிதழ்
(3) சாரதி அனுமதிப் பத்திரம்

22. பண்டைய காலத்தில் தங்கத்தின் நிறையை அளக்கப் பயன்படுத்தப்பட்ட வித்து எது?
(1) மஞ்சாடி (2) குன்றிமணி (3) புளி

23. 

படத்தில் காணப்படுபவர்.

(1) வண.எஸ்.மஹிந்த
(2) ஹிக்கடுவை சுமங்கல தேரர்
(3) சித்திலெப்பை

24. மயக்கமுற்ற நோயாளிக்குச் செய்யக்கூடிய முதலுதவி.
(1) சிறிதளவு நீரைக் குடிக்கக் கொடுத்தல்
(2) ஆடையைத் தளர்த்தி காற்றுப்பட விசிறுதல்
(3) தலை நிமிர்ந்து இருக்குமாறு அமரச் செய்தல்

25. இலங்கையில் காணப்படும் மாவட்டங்களில் பரப்பளவில் பெரிய மாவட்டம் எது?
(1) கொழும்பு (2) யாழ்ப்பாணம் (3) அநுராதபுரம்

26. பின்வருவனவற்றுள் வேரின் மூலம் இனப்பெருக்கம் செய்யும் தாவரம்.
(1) மரவள்ளி (2) கறிவேப்பிலை (3) எலுமிச்சை


27. வீடுகளில் பயன்படுத்தப்படும் பொருட்களில் ஒவ்வொருவரும் தனித்தனியாக பயன்படுத்தும் பாவனைப் பொருள் அல்லாதது.
(1) கைக்குட்டை (2) கண்ணாடி (3) பற்தூரிகை

28. தாவர இலைகளில் கூடு அமைத்துக்கொள்ளும் பிராணி
(1) செவ்வெறும்பு (2) தூக்கணாங்குருவி (3) கொக்கு

29. சூழல் சமநிலையைப் பாதிக்கும் தாவரம் எது?
(1) நாயுருவி (2) நாகதாளி (3) நாய்வாலி

30. இலங்கையிலுள்ள மிக நீளமான நதி
(1) நைல் நதி (2) களனி கங்கை (3) மகாவலி கங்கை

**15. பின்வரும் படத்தைப் பார்த்து மூன்று வாக்கியங்கள் எழுதுக.**
( வாக்கியங்கள் நிகழ்காலத்தில் அமைதல் வேண்டும் )



1. ..............................................................................................................................

..............................................................................................................................

2. ..............................................................................................................................

..............................................................................................................................

3. ..............................................................................................................................

..............................................................................................................................